**Under Section 173 BNSS**

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8081686

1. District மாவட்டம் : Dharmapuri    PS: காவல்நிலையம் : VSAC    Year: ஆண்டு : 2024    FIR No.: மு.த.அ. எண் : 6/AC/2024    Date: நாள் : 24.10.2024

2. (i) Act சட்டம்: BNSS 2023    Sections பிரிவுகள்: 106 r/w
   (ii) Act சட்டம்: The Prevention of Corruption    Sections பிரிவுகள்: 7(A)
   (iii) Act சட்டம்: Act, 1988 as amended in 2018    Sections பிரிவுகள்: 7(A) r/w 12
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல்    Date to : நாள் வரை : 23.10.2024 Prior to 14.00 hrs
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்    Time : நேரம் : 23.10.2024 at 10.00 PM
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : Suo-Motu

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : O/o the Sub-Registrar Harur, Dharmapuri District About 45 km East.
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : G. Perumal    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : R. Gopal
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 44    (d) Nationality : நாட்டினம் : Indian    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : -
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் : -    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் : Inspector of Police VSAC, Dharmapuri    (g) Address : முகவரி : O/o the Deputy Superintendent of Police Vigilance and Anti-Corruption, Dharmapuri.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Tr. M. Ravichandran, Sub-Registrar Harur, Dharmapuri District.
   2) Tr. A. Abdul Ravoop, S/o. Abdul Sukkur, No. 7/282, Govindasamy Nagar, Harur, Dharmapuri District.
   3) Tr. A. Mubarak Batcha, S/o. A. Abdul Ravoop, No. 7/282, Govindasamy Nagar, Harur, Dharmapuri Dist.
   4) Tr. K. Sampath, S/o. Kuppusamy, No. 17/145, Perumal Koil Street, Old Pettai, Harur, Dharmapuri DT.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் : -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheets are enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லைக் கருதி புலனாய்வுக்கு .......................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant: SUO-MOTU
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station: [signature] 24/10/2024
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24.10.2024 At 16.00 Hrs

Name: பெயர் G. PERUMAL
Rank: நிலை Inspector of Police No. எண் ..........
Vigilance and Anti-Corruption
Dharmapuri.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.6/AC/2024, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 r/w 106 BNSS 2023 and 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12-ன் தொடர்ச்சி.

---

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் 23.10.2024-ஆம் தேதி புதன்கிழமை பிற்பகல் 16.00 மணி முதல் 21.30 மணி வரையில் அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 24.10.2024-ஆம் தேதி முற்பகல் 12.45 மணிக்கு தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு பிரிவு கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.6/AC/2024, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 r/w 106 BNSS 2023 and 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 ன்படி பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரம் பின்வருமாறு.

தருமபுரி மாவட்டம், அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரபதிவு செய்வதற்காகவும், வில்லங்க சான்று வழங்குவதற்காகவும், பத்திர நகல் எடுத்து தருவதற்காகவும், ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஆவணங்களுக்கு பதிவுதாரர்களிடமிருந்து சார்பதிவாளர் கையூட்டு பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் 23.10.2024-ஆம் தேதி பிற்பகல் 15.00 மணிக்கு காவல் ஆய்வாளர், அரசு சாட்சிகள் திருமதி L.விஜி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், தருமபுரி வட்டாட்சியர் அலுவலகம், தருமபுரி மற்றும் திரு.N.அருண்குமார், வருவாய் ஆய்வாளர், தருமபுரி உள்வட்டம், தருமபுரி வட்டாட்சியர் அலுவலகம், தருமபுரி மாவட்டம் மற்றும் காவலர்கள் குழுவுடன் அரசு வாகனத்தில் தருமபுரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு அரூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 16.00 மணிக்கு சென்றடையப்பட்டது. சார்பதிவாளர் அலுவலகமானது தருமபுரி – அரூர் பிரதான சாலையில் தெற்கு பக்கம், அரூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு பின்புறமும், அரூர் கிளை சிறைச்சாலைக்கு வடக்கு பக்கம் இடையில் வடமேற்கில் அரூர் சார்பதிவாளர் அலுவலகம் அமைந்திருந்நது. மேற்படி அலுவலகமானது தருமபுரி – அரூர் பிரதான சாலையிலிருந்து சுமார் 100 மீட்டர் தூரத்தில் அமைந்திருந்நது. அவ்வலுவலகத்தின் வெளிபுற நுழைவாயில்

கேட் மேற்கு முகம் பார்த்தவாறும், அலுவலக கட்டிடம் தரைதளம் மட்டும் கொண்ட பழைய கட்டிடமாக இருந்தது. அலுவலகத்திற்கு உள்ளே நுழைந்தபோது வடக்கு தெற்காக வராண்டவில் பொதுமக்கள் அமரும் பகுதியும், அதற்கு அடுத்து அலுவலகத்தின் மத்திய அறையில் கிழக்கு பக்கம் மேற்குமுகம் பார்த்தவாறு சார்பதிவாளர் இருக்கை அமைந்திருந்நது. அதில் அமர்ந்திருந்த நபரிடம் காவல் ஆய்வாளர் தன்னையும், தன்னுடன் வந்த அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவினரையும் அறிமுகம் செய்துகொண்டு அவரைபற்றி விசாரிக்க அவர் தனது பெயர் M.இரவிசந்திரன் என்றும், தான் இவ்வலுவலகத்தில் 30.09.2022—ஆம் தேதி முதல் சார்பதிவாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் காவல் ஆய்வாளர் அவர்கள் அந்த அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்திருப்பதாக தகவல் தெரிவித்து, அதன் பிறகு அரசு சாட்சிகள் முன்னிலையில் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது அந்த அலுவலகத்தின் மத்திய அறையில் சார்பதிவாளர் திரு. M.இரவிசந்திரன் அவர்கள் இருக்கைக்கு அருகில் தெற்கு பக்க சுவரையொட்டி வடக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.ஸ்டீபன் என்றும், அந்த அலுவலகத்தில் 14.02.2024—ஆம் தேதி முதல் இளநிலை உதவியாளராக (மாற்று பணியாக) பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர், மத்திய அறைக்கு வடக்கு பக்கம் உள்ள கேபின் அறையில் கணிணி பிரிவில் தெற்கு முகம் பார்த்தவாறு அமர்ந்திருந்த நபரை விசாரிக்க தனது பெயர் மு.அருண்பிரசாத் என்றும், Cigma என்ற நிறுவனத்தின் மூலம் DATA Entry Operater - ஆக கடந்த இரண்டு ஆண்டுகளாக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவர் அருகில் அமர்ந்திருந்த பெண்மணியை விசாரிக்க, அவர் தனது பெயர் J.ஜெகதீஸ்வரி என்றும், தான் Cigma என்ற நிறுவனத்தின் மூலம் Camera Operater - ஆக கடந்த 2021—ஆம் ஆண்டு முதல் அந்த அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அந்த அலுவலகத்தின் மத்திய அறையில் நுழைவாயில் அருகில் போடப்பட்டிருந்த பெஞ்ச் அருகில் வடக்கு நோக்கி நின்று கொண்டிருந்த நபரை விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.E.சின்னராஜ் என்றும், அந்த அலுவலகத்தில் 2019—ஆம் ஆண்டு முதல் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர், காவல் ஆய்வாளர் அவர்கள் அந்த அலுவலத்தின் முன்பு வராண்டாவில் கையில் பத்திர ஆவணங்களை

வைத்து கொண்டு நின்று கொண்டிருந்த நபரை விசாரிக்க, அவர் தனது பெயர் A.முபாரக் பாட்ஷா என்றும், தனது தந்தை திரு.A.அப்துல் ரவூப் அவர்கள் பதிவு பெற்ற பத்திர எழுத்தராக பணி செய்து வருவதாகவும், அவர் வயதான காரணத்தால், பொதுமக்கள் தங்கள் நிலம் மற்றும் மனைகளை பத்திரப்பதிவு செய்ய அவரிடம் கொடுக்கப்படும் பத்திரங்களை அவர் தயார் செய்து கொடுப்பதை, தான் அவர் சார்பாக அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுதாரர்களின் பத்திரங்களை பத்திரபதிவு செய்வதற்காக சார்பாதிவாளரிடம் கொண்டு வந்து கொடுத்து, பதிவு செய்தபின்பு, பத்திரங்களை பெற்று அவர்களிடம் ஒப்படைக்கும் பணியினை செய்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர், காவல் ஆய்வாளர் அவர்கள் அதே வராண்டாவில் இருந்த மற்றொரு நபரை பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் K.சம்பத் என்றும், தான் பத்திர எழுத்தர் திரு.A.அப்துல் ஜாபர் அவர்களிடம் கடந்த 7 வருடமாக உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும், பத்திர எழுத்தர் திரு.A.அப்துல் ஜாபர் அவர்களால் தயார் செய்யப்படும் பொதுமக்களின் பத்திரபதிவு ஆவணங்களை தான் அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்து பதிவு செய்து தருவதாகவும் தெரிவித்தார். மேலும், அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள பணிகளை சார்பதிவாளர் அவர்களின் உத்தரவின் பெயரில் செய்து வருவதாகவும் தெரிவித்தார். அதற்காக எந்த பண உதவிகளையும் தான் பெறுவதில்லையென்றும் தெரிவித்தார். காவல் ஆய்வாளர் அவர்கள் மேற்படி இருவரையும் சற்று நேரம் அந்த அலுவலகத்தின் வராண்டாவில் உள்ள இருக்கையில் அமர்ந்திருக்குமாறு கூறிவிட்டு, அந்த அலுவலகத்தின் சார்பதிவாளர் மேசை டிராயர் மற்றும் அவர் அருகிலிருந்த கோப்புகள் ஆகியவற்றை அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. சந்தேகத்திற்கு இடமான எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை. பின்னர், காவல் ஆய்வாளர் அவர்கள் சார்பதிவாளர் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, தனது பேண்டின் வலதுபக்க பாக்கெட்டியிலிருந்து ரூ.600/– உள்ளதென்று எடுத்து ஆஜர் செய்தார். தனது அன்றாட போக்குவரத்து செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்தார். பின்னர், காவல் ஆய்வாளர் அவர்கள் தினசரி தனிநபர் பணப்பதிவேட்டை பார்வையிட்டதில், அவரது பெயருக்கு எதிரில் ரூ.600/– என பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்

வகையிலிருந்ததால் அந்த பணம் ரூ.600/—ஐ அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர், காவல் ஆய்வாளர் அவர்களால் சார்பதிவாளர் அருகில் இருக்கையிலிருந்த இளநிலை உதவியாளர் திரு.ஸ்டீபன் அவர்கள் அமர்ந்திருந்த இருக்கையின் மேசை டிராயர் மற்றும் கோப்புகளை சோதனை மேற்கொள்ளப்பட்டது. சந்தேகத்திற்கு இடமான எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை. பின்னர், காவல் ஆய்வாளர் அவர்கள் இளநிலை உதவியாளர் திரு.ஸ்டீபன் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, தன்னிடம் பணம் ஏதுமில்லை என்று தெரிவித்தார். பின்னர், அவரை காவல் ஆய்வாளர் அவர்கள் அரசு சாட்சிகள் முன்னிலையில் திரேக சோதனை செய்தார். அவரிடம் எந்த பணமும் இல்லையென உறுதி செய்யப்பட்டது. பின்னர், காவல் ஆய்வாளர் அவர்கள் மத்திய அறையிலிருந்த அலுவலக உதவியாளர் திரு.E.சின்னராஜ் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, தனது சட்டை மேல்பாக்கெட்டியிலிருந்து ரூ.200/— உள்ளதென்று எடுத்து ஆஜர் செய்தார். தனது கைசெலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்தார். தனிநபர் பணப்பதிவேட்டை பார்வையிட்டதில், அதில் ரூ.200/— பதிவு செய்திருந்தார். மேலும், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும் வகையிலிருந்ததால் அந்த பணம் ரூ.200/—ஐ அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர், கணிணி பிரிவில் உள்ள மேசை டிராயர் மற்றும் கோப்புகளை சோதனை மேற்கொள்ளப்பட்டது. சந்தேகத்திற்கு இடமான எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை. காவல் ஆய்வாளர் அவர்கள் திருமதி.J.ஜெகதீஸ்வரி அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, தனது ஹேண்பேக்கிலிருந்து ரூ.170/— உள்ளதென்று எடுத்து ஆஜர் செய்தார். தனது கைசெலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்தார். தினசரி தனிநபர் பணப்பதிவேட்டை பார்வையிட்டதில், அதில் ரூ.170/— பதிவு செய்திருந்தார். மேலும், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும் வகையிலிருந்ததால் அந்த பணம் ரூ.170/—ஐ அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர், காவல் ஆய்வாளர் அவர்கள் அதே அறையில் இருந்த திரு.மு.அருண்பிரசாத் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, தனது பேண்டின் வலது பக்க பாக்கெட்டிலிருந்து ரூ.450/— உள்ளதென்று எடுத்து ஆஜர் செய்தார். தனது கைசெலவிற்கு வைத்துள்ளதாக

தெரிவித்தார். தினசரி தனிநபர் பணப்பதிவேட்டை பார்வையிட்டதில், அதில் ரூ.450/– பதிவு செய்திருந்தார். மேலும், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும் வகையிலிருந்ததால் அந்த பணம் ரூ.450/–ஐ அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர், அந்த அலுவலகத்தின் மத்திய அறைக்கு பின்பு உள்ள அலுவலகத்தில் உள்ளவர்கள் அமர்ந்து உணவு உண்ணும் அறையினை அரசு சாட்சிகள் மற்றும் சார்பதிவாளர் திரு.M.ரவிசந்திரன் ஆகியோர் முன்னிலையில் சோதனை மேற்கொண்டதில், அந்த அறையின் தென்மேற்கு மூலையில் மேற்கு பக்கம் அமைந்துள்ள சிமெண்ட் அலமாரியில் முதல் அடுக்கில் சோதனை மேற்கொண்டதில், சாப்பாட்டு தட்டின் கீழ் ரூ.500/– தாள்கள் கற்றையாக இருந்ததை எடுத்து அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்க்கையில் ரூ.500/– தாள்கள் 70 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.35,000/- இருந்தது. அதுகுறித்து, காவல் ஆய்வாளர் அவர்கள் சார்பதிவாளர் திரு.M.ரவிசந்திரன் அவர்களிடம் விளக்கம் கேட்க, தனக்கு எதுவும் தெரியாதென்றும், உணவு உண்பதற்கு மட்டும் தான் செல்வேன் என்றும் பதில் கூறினார். அவரது பதில் ஏற்றுகொள்ளும் வகையில் இல்லாததாலும், கணக்கில் வராப்பணம் ரூ.35,000/–த்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்னர், காவல் ஆய்வாளர் அவர்கள், அந்த அலுவலகத்தின் வராண்டாவில் அமரவைக்கப்பட்டிருந்த திரு.A.முபாரக் பாட்ஷா அவர்களை அழைத்து விசாரிக்க 23.10.2024–ம் தேதியன்று தனது தந்தை திரு.A.அப்துல் ரவூப் அவர்கள் தயார் செய்து கொடுத்த 12 பத்திர ஆவணங்களை அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்வதற்கு வந்திருப்பதாக தெரிவித்தார். பின்னர், காவல் ஆய்வாளர் அவரிடம் அன்று 12 பத்திரபதிவு நபர்களிடமிருந்து பதிவு கட்டணம் தவிர வேறு பணம் ஏதேனும் வாங்கி வைத்துள்ளீர்களா என்று கேட்டதற்கு, அவர் சற்று பதற்றமடைந்து தனது பேண்ட்டின் வலதுபுற பாக்கெட்டிலிருந்து கற்றையாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்க்கையில் ரூ.49,000/–ம் இருந்தது. மேலும், காவல் ஆய்வாளர் அவர்கள் திரு.A.முபாரக் பாட்ஷாவிடம் விசாரிக்க, அன்று 12 பத்திரபதிவுதாரர்களிடம் வசூல் செய்த மொத்த தொகை தனது பத்திரபதிவு எழுதும் கடையில் வைத்திருப்பதாக கூறினார். மேலும், தன்னை தனது கடைக்கு அழைத்து

சென்றால், கடையில் உள்ள பணத்தை எடுத்து ஆஜர் செய்ய உள்ளதாக தெரிவித்தார். அதன்படி அவரையும், அரசு சாட்சிகளையும் அழைத்து கொண்டு காவல் ஆய்வாளர் திரு.A.அப்துல் ரவூப் என்பவரது கடைக்கு சென்று அங்கு வைத்திருந்த பணத்தை திரு.A.முபாரக் பாட்ஷா அவர்கள் எடுத்து ஆஜர் செய்தார். காவல் ஆய்வாளர் அவர்கள் அந்த பணத்துடன் திரு.A.முபாரக் பாட்ஷா, அவரது தந்தை திரு.A.அப்துல் ரவூப் மற்றும் அரசு சாட்சிகளுடன் மீண்டும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரப்பட்டது. பின்னர், சார்பதிவாளர் அலுவலகத்தில் அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த பணத்தை எண்ணிப்பார்க்கையில் ரூ.2,46,100/– இருந்தது. அந்த பணம் குறித்து காவல் ஆய்வாளர் அவர்கள் திரு.A.அப்துல் ரவூப் அவர்களிடம் விசாரிக்க, அன்று தான் 12 நபர்களுக்கு பத்திரம் தயார் செய்து கொடுத்ததாகவும், 12 நபர்களிடம் அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையை தான் வசூல் செய்து வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். பின்னர், காவல் ஆய்வாளர் அவர்கள் சார்பதிவாளர் திரு.M.ரவிசந்திரன் அவர்களிடம் பத்திர பதிவு செய்யும் நபர்களிடமிருந்து அரசுக்கு செலுத்த வேண்டிய தொகையை பத்திர எழுத்தர்கள் வசூல் செய்யலாமா என்று கேட்டதற்கு அவர் The Tamil Nadu Document Writer's Licence Rules, 1982 படி எந்த பத்திரபதிவுதாரர்களிடமிருந்து பத்திர எழுத்தர் எந்த தொகையும் வசூல் செய்ய கூடாதென்றுள்ளது என்று தெரிவித்தார். கடையிலிருந்து எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.2,46,100/–ம் மற்றும் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்த திரு.A.முபாரக் பாட்ஷா அவர்கள் ஆஜர் செய்த பணம் ரூ,49,000/– மொத்தம் ரூ.2,95,100/–ஐ மேற்படி திரு.அப்துல் ரவூப் அவர்கள் 12 பத்திர பதிவுதாரர்களிடமிருந்து வசூல் செய்து, அரூர் சார்பதிவாளர் அவர்களுக்கு இலஞ்சமாக கொடுப்பதற்கு வைத்திருந்த பணம் என்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால், அந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்னர், அதே வராண்டாவில் இருந்த திரு.K.சம்பத் என்பவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று காவல் ஆய்வாளர் அவர்கள் அரசு சாட்சிகள் முன்னிலையில் விசாரிக்க, அவர் தனது பேண்டின் வலது பக்க பாக்கெட்டிலிருந்து கற்றையாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் எண்ணிப்பார்க்கையில் ரூ.500 தாள்கள் 54–ம், ரூ.200 தாள்கள்

இரண்டும், ரூ.100 தாள் ஒன்றும் என மொத்தம் ரூ. 27,500/– இருந்தது. காவல் ஆய்வாளர் அவர்கள் அந்த பணம் குறித்து திரு.சம்பத் அவர்களிடம் கேட்க, தனது சொந்த பணம் என்று தெரிவித்தார். அவரது பதில் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததாலும், பத்திர பதிவுதாரர்களிடமிருந்து வசூல் செய்து அரூர் சார்பதிவாளர் அவர்களுக்கு இலஞ்சமாக கொடுப்பதற்கு வைத்திருந்த பணம் என்று நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால், அந்த பணத்தை அரசு சாட்சிகள் முன்னிலையில் வழக்கு நிமித்தம் மகஜரில் கைப்பற்றப்பட்டது. அந்த அலுவலகத்திலிருந்த இளநிலை உதவியாளர் திரு.ஸ்டீபன் அவர்களிடம் அன்று D கணக்கில் வில்லங்க சான்று கோரிய 2–மனுக்கள் அதன் எண்கள் ECA/849/20024 and ECA/850/20024 தொகை ரூ.632/–ம், நகல் மனு இணையவழி 39 நகல்கள் அங்கீகரிக்கப்பட்டதாகவும், அதன் தொகை ரூ.11,899/–ம் என்றும் இரண்டும் சேர்த்து மொத்தம் ரூ.12,531/– இணையவழியில் D கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. A கணக்கில் 42 ஆவணங்கள் 23.10.2024–ஆம் தேதி பதிவு செய்யப்பட்டிருந்தது. அதற்குண்டான Stamp Paper, CD, Sub Division, Sec.41 மற்றும் பதிவு கட்டணம் என மொத்தம் ரூ.8,38,961/– இணையவழியில் A க்கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. Birth & Death - கணக்கில் மொத்தம் ரூ.2,700/– இணையவழியில் B&D கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. நிரந்தர முன்பண பதிவேட்டை காவல் ஆய்வாளர் அவர்கள் கேட்க, இளநிலை உதவியாளர் அவர்கள் அந்த பதிவேட்டையும் மற்றும் ரூ.250/–த்தையும் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஆகஸ்ட் –2024 மாதம் ரூ.250/– பதிவு செய்யப்பட்டுள்ளது. அவை சரியாக இருந்ததால், அந்த பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. H கணக்கு பதிவேடு, வருகைப்பதிவேடு, தனிநபர் பண பதிவேடு, நிரந்தர முன்பண பதிவேடு ஆகியவற்றை பார்வையிட்டதற்காக காவல் ஆய்வாளரும் மற்றும் அரசு சாட்சிகள் இருவரும் கையொப்பம் செய்தனர். மேலும் மேற்கண்ட பதிவேடுகளின் நகல்கள் மற்றும் கணிணி மூலம் எடுக்கப்பட்ட பிரதிகள் ஆகியவற்றில் சார்பதிவாளரிடம் சான்றொப்பம் பெற்று வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி அசல் ஆவணங்கள் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.35,000/– குறித்து திரு.M.இரவிச்சந்திரன் அவர்களும், ஆவண

எழுத்தர் திரு.A.அப்துல் ரஹூப், அவரது மகன் திரு.A.முபாரக்பாட்ஷா மற்றும் தனிநபர் திரு.K.சம்பத் ஆகியோர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட மொத்த தொகை ரூ.3,22,600/– ஐ குறித்து அந்த மூன்று நபர்களும் அளித்த விளக்கம் திருப்திகரமானதாக இல்லை. எனவே ஏற்கனவே எனக்கு கிடைத்த தகவல்படி, அந்த தொகைகள் பத்திரபதிவு செய்வதற்காகவும், வில்லங்க சான்று வழங்குவதற்காகவும், பத்திர நகல் எடுத்து தருவதற்காகவும், ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஆவணங்களுக்கு பதிவுதாரர்களிடமிருந்து ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைதரகர்கள் அரூர் சார்பதிவாளர் திரு.M.இரவிச்சந்திரன் அவர்களுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என நம்புவதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாக அறியப்பட்டதால், இன்று 24.10.2024-ஆம் தேதி மதியம் 12.45 மணிக்கு எதிரி 1) திரு.M.இரவிச்சந்திரன், சார்பதிவாளர், அரூர், தருமபுரி மாவட்டம் என்பவர் மீது தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.6/AC/2024, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 r/w 106 BNSS 2023 மற்றும் எதிரிகள் 2) திரு.A.அப்துல் ரஹூப், த/பெ.அப்துல் சுக்கூர், க.எண்.7/282, கோவிந்தசாமிநகர், அரூர், தருமபுரி மாவட்டம், 3) திரு.A.முபாரக்பாட்ஷா, த/பெ. திரு.A.அப்துல் ரஹூப், க.எண்.7/282, கோவிந்தசாமிநகர், அரூர், தருமபுரி மாவட்டம் மற்றும் 4) திரு.K.சம்பத், த/பெ.குப்புசாமி, க.எண்.17/145, பெருமாள் கோயில் தெரு, பழையபேட்டை, அரூர், தருமபுரி மாவட்டம் ஆகியோர்கள் மீது u/s 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018–ன் படியும் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேலும் முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் சோதனையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல் ஆகியவற்றை மாண்புமிகு தருமபுரி மாவட்ட தலைமை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் மேல் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்பட்டது.

24/10/2024

(G.பெருமாள்)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
தருமபுரி.